**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 279/2016 |
| நாள் | 23.07.2025 |
| வா.சா.3 | அங்கமுத்து |
| வயது | 46 |
| ஊர் | எல்.புதூர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**2 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சிமெண்ட் பாக்டேரில் லோடு மேனாக வேலை பார்த்து வருகீறேன். 2 வது வாதி அன்னலெட்சுமி என்னுடைய உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வா.சா.1 அன்னலெட்சுமி அழைத்ததின் பேரில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். உயில் ஆவணத்தை வா.சா.1 அன்னலெட்சுமி கேட்டுகொண்டதன் பேரில் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. 1 வது வாதி சிதம்பரம் என்னை தொலைபேசியில் அழைத்ததின் பேரில் நான் உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்தேன். 1 வது வாதி சிதம்பரம் சொல்ல சொல்ல வா.சா.2 கனகராஜ் உயில் ஆவணத்தை தயார் செய்தார். அதன்பின்னிட்டு, கனகராஜ் படித்து காண்பித்ததை சிதம்பரம் புரிந்து கொண்டு உயில் ஆவணத்தில் கையொப்பம் செய்தார். 1 வது வாதி சிதம்பரத்திற்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரியல்ல. நான் வா.த.சா.ஆ.12 உயில் ஆவணத்தை தவிர்த்து, வேறு ஆவணங்களில் ஏதேனும் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. பொதுவாக ஆவணம் எழுதினால் அந்தஆவணத்தை சார் பதிவாளர் அலுவலகம் சென்று பதிவார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.த.சா.ஆ.12 உயில்ஆவணம் பதிவு செய்யப்பட்டதா என்பது

எனக்கு தெரியாது. உயில் ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை. அனைவரும் இருக்கும் போது தான் படித்து காண்பித்தார். 1வது வாதி சிதம்பரம் இறந்தது பின்னிட்டு, நானும், வா.சா.1,வா.சா.2 , 3,4 வாதிகள் மற்றும் சுப்ரமணி ஆகியோர் கூட்டாக சேர்ந்து உயில் ஆவணத்தை போலியாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. 1வது வாதி சிதம்பரம் உண்மையாகவே உயில் ஆவணம் எழுதி வைத்திருந்தால், உயில் ஆவணம் எழுதப்பட்டது குறித்து வழக்குரையில் குறிப்பிட்டிருப்பார் என்றும்., அவ்வாறு எழுதாததால் தான் உயில் ஆவணத்தை பற்றி வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. 2 முதல் 4 வாதிகளுக்கு பாகம் கிடைக்க வேண்டி உறவினர் என்ற முறையில் இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தரப்பு சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றால் சரியல்ல.க

**<u>குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை,</u>**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.